தி.மு.கழகம் தொடங்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி

தி.மு.க -75 எனும் மாபெரும் கருத்தரங்கம் அடுத்த மாதம் நடக்கிறது!

இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை,செப்.8-

சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட கொளத்தூர், அம்பத்தூர் மற்றும் திரு.வி.க. நகர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள வார்டுகளிலும் பாகங்களிலும் புதிதாக நியமிக்கப்பட்ட கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டத்தில் இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு எழுச்சிமிக்க உரையாற்றினார்.

அப்போது அவர், ``தி.மு.கழகத்தின் நாற்றங்காலான, இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகள் ஒவ்வொருவரும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், கழகத் தலைவர் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், கடமை-கண்ணியம்-கட்டுப்பாட்டுடன் மக்கள் பணி - கழகப் பணியாற்றிட உறுதியேற்போம்" என்று குறிப்பிட்டார்.

இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட கொளத்தூர், திரு.வி.க.நகர், அம்பத்தூர் தொகுதிகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வட்ட இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் பாக அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டத்தில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது. உங்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சென்னை கிழக்கு மாவட்டம் எதை செய்தாலும், அதை சிறப்பாக செய்வார் அண்ணன் சேகர்பாபு அவர்கள். இன்றைக்கு இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தையும் மிகப் பெரிய சாதனையாக நடத்தியிருக்கிறார். சேகர்பாபு அண்ணன் பெயர் சொன்னாலே, கண்டிப்பாக அங்கு ஏதாவது ஒரு சாதனையைச் செய்து காட்டுவார்.

பொதுவாக ஒரு மாவட்டத்தில் ஆறு தொகுதிகள் இருக்கிறது என்றால் அதை பிரித்து நடத்துவோம். முதன்முறையாக சென்னை கிழக்கு மாவட்டத்தில் இருக்கின்ற ஆறு தொகுதிகளையும் அடுத்தடுத்த 2 நாட்களில் அறிவிப்பு, வெளியிட்டு இரண்டே நாட்களில் நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார் என்றால், அந்த முழுப் பெருமையும் அண்ணன் சேகர்பாபு அவர்களைத்தான் சேரும். இப்படியொரு நிகழ்ச்சியை அவரைத் தவிர வேறு யாராலும் நடத்த முடியாது. அதனால் நம் தலைவர் அவர்கள் எப்போதுமே உங்களை சேகர்பாபு இல்லை, செயல் பாபு என்று பாராட்டுகிறேன் என்று சொல்வார். நானும் பலமுறை சொல்லியிருக்கிறேன்.

கிழக்கு மாவட்ட சிறப்பு

இந்த கிழக்கு மாவட்டத்துக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. நம்முடைய கழக மாவட்டங்களிலேயே மிக அதிகமான சட்டமன்றத் தொகுதியைப் பெற்றுள்ளது இந்த சென்னை கிழக்கு மாவட்டம். நம் இளைஞர் அணிக்கும், சென்னை கிழக்கு மாவட்டத்துக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. ஏனென்றால், கழகத்தின் முதல் இளைஞர் அணிச் செயலாளரையும், தமிழ்நாட்டின் முதலமைச்சரையும் கொடுத்தது இந்த சென்னை கிழக்கு மாவட்டம் என்றால் அது மிகையல்ல.பேசுவது குறைவாக இருக்க வேண்டும், அனைத்தையும் செயலில் காட்ட வேண்டும் என்று தலைவர் அவர்கள் சொல்வார்.

அண்ணன் சேகர்பாபு அவர்கள் பேசும் போது சொன்னார். சென்னை கிழக்கு மாவட்டத்தில் மொத்தம் 6 தொகுதி, 6 தொகுதியிலும் உதயசூரியன் உதிக்கப்போகிறது என்பதை தெளிவாகச் சொன்னார். நேற்று 3 தொகுதிக்கு இதேபோல் அறிமுகக்கூட்டம் எழுச்சியாக நடந்தது. இன்றைக்கு இந்த மூன்று தொகுதிகளுக்கு நடந்துகொண்டு இருக்கிறது. இராணுவத்தில் பயிற்சி அளிப்பது போல பயிற்சி கொடுத்து தயார்ப்படுத்தி வைத்துள்ளார். நீங்கள் ஒரு முழு நேர அரசியல்வாதி, உங்களுடன் எங்களால் போட்டியே போட முடியாது என்று பலமுறை சொல்லியிருக்கிறேன். அந்த அளவுக்கு இந்த கிழக்கு மாவட்டத்தை நம் கழகத்தின் கோட்டையாக மாற்றி வைத்திருக்கிறார் அண்ணன் சேகர்பாபு அவர்கள்.

இன்றைக்கு காலையில்தான் உங்களின் பெயர்கள் எல்லாம் முரசொலியில் அறிவிப்பு வந்தது. மாலையில் உங்களுக்கு அறிமுகக் கூட்டம். அரசு நிகழ்ச்சி, கழக நிகழ்ச்சி இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டுள்ளேன். ஆனால், இந்த இளைஞர் அணி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, நிர்வாகிகள் உங்களை எல்லாம் பார்க்கும்போது என் குடும்ப நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, என் குடும்பத்தில் இருக்கின்ற என் அண்ணன்களையும், தம்பிகளையும் பார்க்கின்ற உணர்வு எப்போதுமே ஏற்படும்.

இளைஞர் அணியின் வரலாறு

நம் இளைஞர் அணியின் வரலாற்றை சிறிதளவாவது நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். 1980ஆம் ஆண்டு மதுரை ஜான்சிராணி பூங்காவில் கலைஞர் அவர்களாலும், நம்முடைய இனமான பேராசிரியர் அவர்களின் வாழ்த்துக்களோடும் தொடங்கப்பட்டதுதான் இளைஞர் அணி. தி.மு.க இளைஞர் அணிக்கு இன்னொரு பெருமை உண்டு.

இன்றைக்கு இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து இயக்கங்களும் இளைஞர் அணியைத் துவங்குகிறார்கள். ஆனால் நம்முடைய தி.மு.க இளைஞர் அணிக்கு என்ன தெரியுமா பெருமை? இந்தியாவிலேயே முதன்முதலாக ஒரு இயக்கத்துக்கு இளைஞர் அணியைத் துவங்கியது திராவிட முன்னேற்றக் கழகம்தான், அதை துவங்கியது நம்முடைய கழகத் தலைவர் அவர்கள்தன். நாம்தான் இந்தியாவில் இருக்கின்ற அனைத்து இயக்கங்களுக்கும் எடுத்துக்காட்டாக இருக்கிறோம். நம் செயல்களிலும், மக்கள் பணியிலும், கழகப் பணியிலும் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். 45 ஆண்டு காலம் படிப்படியாக உயர்ந்து, இன்றைக்கு அசைக்க முடியாத சக்தியாக தி.மு.க இளைஞர் அணி விளங்கிக்கொண்டு இருக்கிறது.

இங்கே இளைஞர் அணி நிர்வாகிகள் மட்டுமல்ல, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகளும் வந்திருக்கிறீர்கள். இன்றைக்கு இளைஞர் அணி இந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்றால் அதற்கு அவர்களின் ஒத்துழைப்பும், வழிகாட்டுதலும் மிகமிக முக்கியம். அவர்கள் இல்லாமல் இளைஞர் அணி இவ்வளவு வளர்ச்சி அடைந்திருக்காது. எனவே, இளைஞர் அணியின் சார்பாக அவர்களுக்கு எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிதாக பொறுப்பு

இன்றைக்கு இந்தியாவில் பல கட்சிகள் பூத் கமிட்டி அமைப்பதற்கே தடுமாறிக்கொண்டு இருக்கிற இந்த நேரத்தில் நாம் ஒவ்வொரு பூத்துக்கும் ஒரு இளைஞர் அணி அமைப்பாளரை நாம் நியமித்துக்கொண்டு இருக்கிறோம். அது தான் இளைஞர் அணியின் கட்டமைப்பு.

புதிதாக பொறுப்புக்கு வந்திருக்கக்கூடிய நீங்கள் அத்தனைபேரும் உங்களின் காலரை தூக்கி விட்டு பெருமையாக சொல்லிக் கொள்ளலாம். ஏனென்றால் சாதாரணமாக நீங்கள் இந்த இடத்துக்கு வரவில்லை. உங்களின் உழைப்பு இந்த இடத்துக்கு உங்களை கொண்டு வந்துள்ளது.

இன்று என் உழைப்பினால் இந்த பொறுப்புக்கு வந்துள்ளேன், நாளை இன்னும் அதிகமாக உழைப்பதற்காக வந்திருக்கிறேன் என்பதையும் நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

உங்களுக்கு கொடுத்திருப்பது பதவி கிடையாது. உங்களுக்கு கொடுக்கப்பட்டிருப்பது பொறுப்பு என்று தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்வார். எனவே, நீங்கள் பொறுப்போடு செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இளைஞர் அணியில் உங்களுக்கு நான் நான் கொடுக்கின்ற வாக்குறுதி கொடுக்கிறேன். இளைஞர் அணியில் நீங்கள் சரியாக உழைத்தீர்கள் என்றால், நிச்சயம் உங்களுக்கான அங்கீகாரத்தை சரியான நேரத்தில் நம் தலைவர் அவர்கள் கொடுப்பார் என்பதை இங்கு கூறிக்கொள்கிறேன். அதற்கு பல உதாரணங்களை இந்த மேடையிலேயே பார்க்கலாம்.

கழகத்தின் துணை அமைப்புச் செயலாளராக அண்ணன் தாயகம் கவி அவர்கள் அமர்ந்து இருக்கிறார். தலைவர் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபொழுது அவர் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளராக இருந்து தலைவரிடத்தில் பணியாற்றினார். நான் இளைஞர் அணி செயலாளராக பொறுப்பேற்றபோது, அவர் இளைஞர் அணித் துணைச் செயலாளராக இருந்து என்னை வழிநடத்திய வர்தான் அண்ணன் தாயகம் கவி அவர்கள்.

தாய் கழகம்

இளைஞர் அணியிலிருந்து உயர்வு பெற்று தாய் கழகத்தில் துணை அமைப்புச் செயலாளராக பணியாற்றிக்கொண்டு இருக்கிறார். அவரின் உழைப்பால் இரண்டாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் அண்ணன் தாயகம் கவி அவர்கள்.

அதேபோல் இந்த மண்டலத்தின் பொறுப்பாளர் மாநில துணைச் செயலாளர் சகோதரர் ஜோயல் அவர்கள். தலைவர் அவர்கள் இளைஞர் அணி செயலாளராக இருந்தபோது மாவட்ட அமைப்பாளராக பணியாற்றி, அதன் பிறகு மாநில துணைச் செயலாளராகி, இன்றைக்கு எனக்கும் வழிக்காட்டிக்கொண்டு இருக்கிறார் ஜோயல் அவர்கள். எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், அண்ணா சென்னையில் நடத்துவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுங்கள் என்று அனைத்து நிகழ்ச்சிகளையும் சிறப்பாக ஒருங்கிணைக்கக்கூடியவர்தான் ஜோயல் அவர்கள்.

இப்படி இந்த அரங்கத்தில் மட்டுமல்ல, இந்த மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுக்க இளைஞர் அணியில் பணியாற்றியவர்கள் இன்றைக்கு கழகத்தில் மாவட்ட, ஒன்றிய, பகுதிக் கழகச் செயலாளர்களாக பணியாற்றி வருகிறார்கள். இளைஞர் அணி என்பது ஒரு பயிற்சிக் களம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

கொள்கைக்கூட்டம்

கழகத்தில் மட்டுமல்ல சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக, மக்கள் பிரதிநிதிகளாக, இன்னும் பெருமையாகச் சொல்லவேண்டுமென்றால் தமிழ்நாட்டின் முதலமைச்சரையும் கொடுத்தது நம்முடைய தி.மு.க இளைஞர் அணி என்பதை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். வெறும் கைத் தட்டுவதற்காகவும், ஆரவாரம் செய்வதற்காகவும், விசில் அடிப்பதற்காகவும் கூடிய கூட்டம் இல்லை இந்த இளைஞர் அணி கூட்டம். கொள்கை கூட்டம் என்பதை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். தந்தை பெரியாரின், பேரறிஞர் அண்ணாவின், டாக்டர் கலைஞரின், நம் கழகத் தலைவர் அவர்களின் கொள்கைக்கூட்டம் நாம் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

அடுத்து வருகின்ற 6 மாதத்தின் ஒவ்வொரு மணித்துளியும் நமக்கு முக்கியமான நேரம் என்பதை உணர்ந்து பொறுப்போடு நீங்கள் செயல்பட வேண்டும். உங்களுக்கெல்லாம் மினிட் புக் கொடுக்கப்பட்டிருக்கும். அந்த மினிட் புக்கை தயவு செய்து சரியாக பராமரியுங்கள். எந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டாலும் அதை பற்றி ஒரு குறிப்பு எழுதி, அதில் நிகழ்ச்சிக்கு வந்திருப்பவர்களிடம் கையெழுத்து வாங்கிக் கொள்ளுங்கள்.

இங்கு இருக்கக்கூடிய நீங்கள் ஒவ்வொருவரும் 25 வாக்காளர்களை உங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருந்தீர்கள் என்றால் உங்களின் வளர்ச்சியை யாராலும் தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாது.

அதேமாதிரி களத்தில் எவ்வளவு செயல்படுகிறீர்களோ, அதே மாதிரி சமூக வலைதளங்களிலும் நீங்கள் செயல்பட வேண்டும். உங்களுக்கு அன்பகத்திலிருந்து வருகிற பதிவுகளைப் படியுங்கள். தலைவருடைய பக்கம், தலைவரின் அறிக்கைகளைப் படியுங்கள்.

அரசின் சாதனைகள்

தினமும் காலையில் `முரசொலி' பத்திரிகையைப் படித்துவிடுங்கள். தலைவரின் அறிக்கை, தலையங்கம், அதிலும் குறிப்பாக, முரசொலியில் கடைசிப் பக்கத்தை, தலைவர் அவர்கள் இளைஞர் அணிக்கு என்று தனியாக ஒதுக்கி கொடுத்து இருக்கிறார்கள். அந்தப் பக்கத்திற்கு பெயரே பாசறை. அது படிப்பதற்கு மிகவும் சுலபமாக இருக்கும். சின்னச் சின்ன துணுக்குகள், அரசின் சாதனைகள், கார்ட்டூன்கள் என படிப்பதற்கு மிகவும் எளிதாக இருக்கும். தினமும் அதை படியுங்கள்.

இது எதுவோ கூடி கலைந்தக் கூட்டமாக இருக்கக்கூடாது. கொள்கைக்காக கூடிய கூட்டமாக இருக்க வேண்டும். தலைவர் என்ன சொல்கிறாரோ அதை களத்தில் இறங்கி செய்கின்ற கூட்டமாக இருக்க வேண்டும்.

இங்கு வந்திருக்கக்கூடிய பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் எல்லாம் வந்திருக்கிறீர்கள். அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய அன்பு வேண்டுகோள். புதிய பொறுப்புகளுக்கு வந்திருக்கக்கூடிய, நம்முடைய இளைஞர் அணி தம்பிகளுக்குப் பெரிதாக அரசியல் அனுபவம் இருக்காது. அவர்கள் ஏதாவது தெரிந்தோ, தெரியாமலோ சின்னச்சின்ன தவறுகள் செய்துவிட்டார்கள் என்றால், நெறிமுறை தெரியாமல் நடந்து கொண்டால் அவர்களை தயவுசெய்து புறக்கணிக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடன் கூட இருந்து அவர்களின் கைகளைப் பிடித்து வழி நடத்துங்கள்.

இன்றைக்கு சென்னை கிழக்கு மாவட்டம் மட்டுமல்ல, அடுத்து தமிழ்நாடு முழுவதும் நகர - பேரூர் வார்டுகள், ஊராட்சிக் கிளைகள் தோறும் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களை நியமிக்க இருக்கிறோம். அப்படி நியமித்தால், இளைஞர் அணியில் மட்டும் கிட்டதட்ட 5 லட்சம் நிர்வாகிகள் இருக்க போகிறார்கள். 5 லட்சம் இளைஞர்களும் ஒரு பத்து பேரை நம் இயக்கத்திற்கு கொண்டு வந்தார்கள் என்றால் கிட்டத்தட்ட 50 லட்சம் பேர் என இந்தியாவில் அசைக்க முடியாத சக்தியாக நம் தலைவர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கும். அதற்கு இளைஞர் அணி உற்றத்துணையாக இருக்க வேண்டும். அப்படியொரு நிலைமை உருவானது என்றால், இந்தியாவிலேயே தொட்டுப் பார்க்க முடியாத இயக்கமாக நம் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கும்.

கழகத்தின் வரலாறு

தற்போது உள்ள இளைஞர்களுக்கு நம் கழகத்தின் வரலாற்றை எடுத்துச் சொல்லுங்கள். கலைஞர் என்னென்ன செய்து இருக்கிறார், பெரியார் எதற்காகப் போராடினார், அண்ணா என்னென்ன திட்டம் வைத்திருந்தார், அதை கலைஞர் எப்படி செய்து முடித்தார், அதை எப்படி மேம்படுத்தி நம்முடைய தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, எவ்வாறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி, மக்கள் பணி ஆற்றி இருக்கிறார் என்பதையெல்லாம் அவர்களிடம் சொல்லுங்கள். தலைவரின் உழைப்பைப் பற்றி பேசுங்கள்.

நாம் செய்வது வெறும் அரசியல் பணி மட்டுமல்ல, இளைஞர் அணி சார்பாக களத்தில் மட்டுமல்ல கருத்தியல் ரீதியாகவும் பல பணிகளைச் செய்து கொண்யிருக்கிறோம். இந்தியாவில் எந்த இயக்கமும், எந்த அணியும் செய்யாதது. தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதியில் நூற்றுக்கும் அதிகமான தொகுதிகளில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை, இளைஞர் அணி சார்பாக திறந்து மிகச் சிறப்பாக பொதுமக்களுடைய வாழ்த்துகளுடன் நடத்திக்கொண்டிருக்கிறோம்.

அன்பகத்தில் ஒரு குழு அமைத்திருக்கிறோம். ஒவ்வொரு நூலகத்துக்கும் சென்று, நூலகத்தை சரியாகப் பராமரிக்கிறார்களா? பொதுமக்கள் பயன்படுத்துகிறார்களா? என்று அன்பகத்திலிருந்து பின்தொடர்கிறோம்.

தி.மு.க.–75 கருத்தரங்கம்

நம் இளைஞர் அணி தம்பிமார்கள் களத்தில் இறங்கி மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஒவ்வொரு கல்லூரியாக சென்று, பேச்சுப்போட்டியைப் பற்றி எடுத்துச் சொல்லி, பேச்சுப்போட்டி நடத்தி 200 இளம் பேச்சாளர்களை நாம் கழகத்திற்கு ஒப்படைத்திருக்கிறோம். அந்த 200 பேச்சாளர்களும் இன்றைக்கு மிகச் சிறப்பாக தமிழ்நாடு முழுக்க ஒவ்வொரு கூட்டத்திலும் பேசி வருகிறார்கள்.

முத்தமிழறிஞர் பதிப்பகத்தைத் தொடங்கியுள்ளோம். அதன் வழியாக 25 நூல்களை வெளியிட்டிருக்கிறோம். எந்த இயக்கத்திலும், எந்த அணியும் செய்யாத சாதனைகள் இவை. இவற்றைத் தொடர்ந்து மிக மிக முக்கியமான முன்னெடுப்பாக வருங்காலப் பத்திரிக்கையாளர்களை உருவாக்க வேண்டும் என்று கலைஞர் மாணவர் பத்திரிக்கையாளர் திட்டத்தை துவங்கி இருக்கின்றோம்.

கழகம் தொடங்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதை ஒட்டி தி.மு.க.-75 எனும் மிகப்பெரிய கருத்தரங்கத்தை அடுத்த மாதம் நடத்த இருக்கின்றோம். இந்தப் பணிகளை எல்லாம் மக்களிடமும், இளைஞர்களிடமும் கொண்டுச் சேருங்கள்.

இவ்வாறு இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

பங்கேற்றவர்கள்

அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், பரந்தாமன், வெற்றியழகன், நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், பகுதிக் கழகச் செயலாளர்கள் ஐ.சி. எஃப் முரளிதரண், நாகராசன், எம்.டி..ஆர்.நாகராஜ், டி.எஸ்.பி.ராஜகோபால், சாமிக்கண்ணு, பி.கே.மூர்த்தி, இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் ஜோயல், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், துணை அமைப்பாளர்கள் பாலமுருகன், ஜெகதீஷ், வினோத், ஜி.ஜெ.பிரபு, தனசேகர், சங்கர் நானா, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் பிரசாத், திலீப்குமார், மணிகண்டன், ஸ்ரீதர் ராஜன், இரா.வெ.பிரபு, வசந்த், ஜெ.பி. ஆர்.ரகு உள்பட பலரும் கலந்துகொண்டனர்.